# உஸ்பெகிஸ்தான்



## “தேவனே, எனக்கு உதவும்”

*தேவன் அவரது ஜெபத்தைக் கேட்டார். அவருக்கு உதவினார்.*

உஸ்பெகிஸ்தான் சோவியத் குடியரசு சமயத்தில், தங்கள் வீட்டிலிருந்த புனிதப்பொருட்களுக்கு முன்பாக முழங்காலிட்டு பாட்டி வழிபாடு செய்வதுண்டு; அதைப் பார்க்கும்போது ஆலாவுக்கு ஒன்றுமே புரியாது.

“நான் பிரார்த்தனை செய்கிறேன்” என்று சொல்லுவார்.

“ஏன் பிரார்த்தனை செய்கிறீர்கள்? யாரிடம் பிரார்த்தனை செய்கிறீர்கள்?” என்று ஆலா கேட்பாள்.

“பரலோகத்தில் இருக்கிற கடவுளிடம் பிரார்த்தனை செய்கிறேன். அவர் நம்மை நேசிப்பதால் நாமும் அவரை நேசிக்கவேண்டும். அவருக்கு நாம் பயப்படவேண்டும்” என்று சொல்லுவார்.

இயேசு சிலுவையில் தொங்குவதுபோல சுவற்றில் ஒரு படத்தை பாட்டி மாட்டியிருந்தார்; அதில் தொங்குவது யாரென்று ஆலா கேட்டாள்.

“அது நம் ஆண்டவராகிய இயேசு. அவர் நம் பூமிக்கு வந்தார், மனிதர்கள் அவரைக் கொன்றுவிட்டார்கள்” என்று பாட்டி சொன்னார்.

சிறுமியான ஆலாவுக்கு அவ்வளவுதான் தெரியும். அவளுக்கு அதிக விசுவாசமெல்லாம் கிடையாது. ஆனால், தேவனிடம் தான் ஜெபிக்கமுடியும் என்பதை மட்டும் அறிந்துகொண்டாள். எனவே, எப்போதெல்லாம் பயமாக இருக்கிறதோ, அப்போதெல்லாம் ஜெபிப்பாள்.

“தேவனே, எனக்கு உதவி செய்யும்” என்று ஜெபித்தாள்.

அப்போது சோவியத் யூனியன் உடைந்தது; உஸ்பெகிஸ்தான்

சுதந்தர நாடாக மாறியது. முன்பெல்லாம் தெருக்கள் அமைதியாக இருக்கும்; இப்போது இரவு நேரங்களில் போதை ஆசாமிகளும் குடிகாரர்களும் சுற்றியதால், ஆபத்தான தெருக்களாயின. இரவு நேரங்களில் ஆலா, வீட்டிற்கு நடந்துசெல்லும் போது, "தேவனே, எனக்கு உதவும்"என்று ஜெபித்தாள்.

ஆலாவுக்கு திருமணமானது. ஒரு மகனும் மகளும் பிறந்தார்கள். அவளது நகரத்தில் ஒரு ஆலயம் வந்ததுமே, வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் தன் பிள்ளைகளை அங்கு அழைத்துச் சென்றாள். அங்கு மெழுகுவர்த்தி ஏற்றி, பிரார்த்தனை செய்தாள். ஆனால் அந்த ஆலயத்தை விட்டு கிளம்புகிற சமயங்களில் எல்லாம் வெறுமையாக உணர்ந்தாள். ஏதோ தன்னிடம் இல்லாதது போன்ற உணர்வு ஏற்பட்டது.

ஒருநாள், அவளது தோழி ஒருவர், அவருக்கு ஒரு புத்தகத்தை பரிசாகக் கொடுத்தார். அந்தப் புத்தகத்தின் ஆசிரியரான எலன் ஒய்ட் பற்றி ஆலா கேள்விப்பட்டதே இல்லை. ஆனால் பழைய ஏற்பாட்டு சம்பவங்கள் பற்றி அவர் எழுதியிருந்த விதம் ஆலாவுக்கு மிகவும் பிடித்திருந்தது. வாரத்தின் ஏழாம் நாளாகிய சனிக்கிழமைதான் கர்த்தருடைய ஓய்வுநாள் என்பதை முதன் முதலாக அறிந்துகொண்டாள். ஏழாம் நாள் ஓய்வுநாளில் ஆராதனை செய்கிறவர்களின் சபைக்குச் செல்லவேண்டும் என்று அவருக்குள்ளாக ஓர் ஆசை உருவானது. ஆனால் அந்தச் சபையை எங்கே கண்டுபிடிப்பது?

பல வருடங்கள் கடந்தன.

அவரது முன்னாள் வகுப்பு தோழியான பழைய நண்பர் ஒருவர் அவரைப் பார்ப்பதற்காக வேறு ஒரு நகரத்திலிருந்து வந்திருந்தார். தான் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபை ஒன்றில், ஓய்வுநாளில் ஆராதனை செய்து வருவதாக ஆலாவிடம் சொன்னார். "ஏழாம் நாள் ஓய்வுநாளைக் கைக்கொள்ளுகிறவர்கள் உஸ்பெகிஸ்தானில் இருக்கிறார்களா?" என்று ஆச்சரியத்தோடு ஆலா கேட்டார்.

அந்தத் தோழி நாத்திகராக இருந்தவர். தான் தேவனை அறிந்துகொண்டது பற்றியும், இப்போது தன் முழு இருதயத்தோடும் அவரில் அன்புகூருவதுபற்றியும் சாட்சியாகச் சொன்னார்.

தன் தோழி ஒரு புதிய நபராக மாறியிருந்ததை ஆலா அறிந்துகொண்டார். அவரது முன்னாள் வாழ்க்கை முற்றிலும் மாறியிருந்தது.

சில நாட்களுக்கு பிறகு ஆலா தன் தோழியின் வீட்டிற்குச் சென்றிருந்தார். நான்கு மணி நேர பேருந்து பயணத் தூரத்தில் அவரது வீடு இருந்தது. ஓய்வுநாளில் அவர்கள் அட்வென்டிஸ்ட் சபைக்குச் சென்றார்கள். அங்கு நடந்த நிகழ்ச்சிகள் எல்லாமே அவருக்குப் பிடித்திருந்தன. ஆனால் ஒவ்வோர் ஓய்வுநாளிலும் செல்லமுடியாத அளவுக்கு ஆலயம் தூரத்தில் இருந்தது.

"தேவனே, எனக்கு உதவி செய்யும்" என்று ஜெபித்தார்.

அந்தச் சமயத்தில் ஆலாவின் மூத்தமகளான வயலெட்டாவுக்குத்

திருமணமாகி, உஸ்பெகிஸ்தானின் தலைநகரான டாஸ்கென்டுக்குச் சென்றார். அதன்பிறகு ஆலாவின் கணவர் மரித்துப்போனார். எனவே, வயலெடாவுடன் இருப்பதற்காக டாஸ்கென்டுக்குச் சென்றார். டாஸ் கென்டிஸ் மூன்று அட்வென்டிஸ்ட் ஆலயங்கள் இருந்ததை தன் தோழி மூலம் அறிந்துகொண்டார். ஆலாவும் வயலெட்டாவும் ஒவ்வோர் ஓய்வுநாளிலும் ஆராதனையில் கலந்துகொள்ளஆரம்பித்தார்கள். சபை அங்கத்தினர் ஒருவர் வேதப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்க முன்வந்தார். அம்மாவும் மகளும் 28 பாடங்களைப் படித்து முடித்தார்கள். இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம்பெற ஆலா முடிவெடுத்தார்.

“தேவனே, எனக்கு உதவி செய்யும்” என்று ஜெபித்தார்.

பிறகு ரஷ்யாவில் உள்ள அட்வென்டிஸ்ட் சபையின் வேதாகமக் கல்லூரி இருக்கிற அட்வென்டிஸ்ட் பல்கலைக்கழத்தின் தலைவரான சாவோவ்ஸ்கி சுவிசேஷக் கூட்டங்கள் நடத்துவதற்காக வந்திருந்தார். பிரசங்கம்முடிந்து, மேடையிலிருந்து அழைப்பு கொடுத்தபோது, ஆலா தான் முதன்முதலாக எழுந்து முன்னபாகச் சென்றார். அவரும் அவரது மகளும் வேறு எட்டு பேரும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

இன்று, ஆலாவும் வயலெட்டாவும் அட்வென்டிஸ்ட் சபையில் உண்மையுள்ள சபை உதவிக்காரர்களாக இருக்கிறார்கள்.

“தேவனுக்குச் சேவைசெய்வதில் மகிழ்ச்சியடைகிறோம்” என்று ஆலா சொன்னார்.

தேவன் அவரது ஜெபத்தைக் கேட்டார். அவருக்கு உதவினார். மனநிறைவுடன் காணப்பட்டார்.

இந்தக் காலாண்டின் பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதி, உஸ்பெகிஸ்தானின் டஸ்கென்டில் முதல் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் ஆரம்பப்பள்ளியை ஆரம்பிப்பதற்குப் பயன்படும். ஜூன் 29ம் தேதி, உதாரத்துவமாக காணிக்கை கொடுக்கத் தீர்மானித்திருப்பதற்கு நன்றி.

## கதைக் குறிப்புகள்

- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- யூரோ ஆசியா டிவிஷனிலிருந்து ஊழிய விவரங்களையும் துணுக்குகளையும் பதிவிறக்க: bit.ly/esd-2024.
- அடுத்த வாரம் ஆலியாவின் மகள் வயலெட்டாவைப்பற்றி அதிகம் கற்றுக்கொள்ளலாம்.
- செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபைசின் “ஐ வில் கோ“ என்ற திட்டத்தின் பின்வரும் நோக்கங்களை இந்த ஊழியக்கதை விளக்குகிறது.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 5, “தனிநபர்களையும் குடும்பங்களையும் ஆவியில் நிறைந்த வாழ்வுள்ளவர்களாக மாற்றவேண்டும்”.